பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

*07 11 2025 FRIDAY 6.30 PM*

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுதந்திரப் போராட்டத்தின் குரலாக வந்தே மாதரம் ஒலித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கோவாவில் நடைபெறவுள்ள சர்வதேச திரைப்பட விழாவில், 50 பெண் இயக்குநர்களின் படைப்புகள் திரையிடப்படவுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அறிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் பெண்களுக்கு துளியளவும் பாதுகாப்பு இல்லாத சூழல் உருவாகியுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

5. தெலங்கானா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tushar Suveer அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<

சுதந்திரப் போராட்டத்தின் குரலாக வந்தே மாதரம் ஒலித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு கொண்டாட்டங்களை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் உணர்வாக வந்தே மாதரம் உள்ளது என்று பிரதமர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் – மோடி (1) 44 செகண்ட்ஸ்)*

*இந்த நூற்றாண்டினை நமக்கானதாக மாற்ற வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.*

*(சவுண்ட் பைட் – மோடி (2) 23 செகண்ட்ஸ்)*

*இந்த நிகழ்ச்சியில் வந்தே மாதரம் குறித்த நினைவு அஞ்சல்தலை மற்றும் நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.*

*வந்தே மாதரம் பாடலை பாடி, பொதுமக்கள் பதிவேற்றம் செய்வதற்கான இணையதளத்தையும் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.*

*இந்நாளையொட்டி, நாடுமுழுவதும் வந்தே மாதரம் பாடல் பாடும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*>>>>>><<<<<*

*கோவாவில் நடைபெறவுள்ள சர்வதேச திரைப்பட விழாவில், 81 நாடுகளின் 240 திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். மகளிர் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதை எடுத்துரைக்கும் வகையில், 50 பெண் இயக்குநர்களின் திரைப்படங்கள் இதில் திரையிடப்படவுள்ளதாகவும் கூறினார்.*

*நமது திரைப்பட துறையினருக்கு சர்வதேச வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் நோக்கில் இந்த திரைப்பட விழா நடத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.*

படைப்பாளிகளின் இணைப்புப் பாலமாகவும் இந்த விழா திகழும் என்று அவர் கூறினார்.

இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போது, தகவல் ஒலிபரப்புத்துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜு பேசுகையில். இந்த திரைப்பட விழா வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் வரும் 20ஆம் தேதி தொடங்கவுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>>><<<<<

தமிழகத்தில் பெண்களுக்கு துளியளவும் பாதுகாப்பு இல்லாத சூழல் உருவாகியுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கோவையில் மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் நடைபெற்ற மூன்று தினங்களுக்குள்ளாக, இருகூரில் ஒரு பெண் காரில் கடத்தப்படும் காணொலி வெளியாகியுள்ளது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

காவல்துறையினர், அப்பெண்ணை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படாததே பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கோவை, இருகூரில் பெண் கடத்தப்பட்டதாக வெளியான தகவல் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக மாநகர காவல்துறை ஆணையர் திரு. சரவண சுந்தர் கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண் கடத்தப்பட்டதாக இதுவரை எந்தப் புகாரும் இல்லை என்று தெரிவித்தார்.

இதுதொடர்பாக வெளியான காணொலியை ஆய்வு செய்து வருவதாகவும், காரின் பதிவெண்ணை அடையாளம காணும் பணி நடைபெற்று வருவதாகவும் திரு. சரவண சுந்தர் கூறினார்.

>>>>>><<<<<

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

புற்றுநோய் தடுப்பு மற்றும் சிகிச்சை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும் என்று ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அரசு மருத்துவர் கோபாலகிருஷ்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - கோபாலகிருஷ்ணன் 55 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 53 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டத்தில் மாணவர்கள் பங்கேற்ற ஒற்றுமைப் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<

மதுரை மாவட்டத்தில் நடைபெறவுள்ள தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திரு. பிரவின்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றுமாறு மாவட்ட கண்காணிப்பு அதிகாரி திருமதி. கெஜலட்சுமி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

தெலங்கானா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tushar Suveer அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஹைதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் 21-14, 21-16 என்ற செட்கணக்கில் இந்தியாவின் சதிஷ்குமாரை வென்றார்.

இதர ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் மஞ்சுநாத், Alap Mishra, Ginpaul Sonna ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Sakshi Phogat, Mansi Singh, Rakshitha Sree, Shreya Lele ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் Maneesha - Dhruv Rawat இணையும், Ritika Thaker - Nitin Kumar இணையும், சாத்விக் ரெட்டி - Reshika இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

ஆடவர் இரட்டையர் பிரிவில் அர்ஜுன் – Amsakarunan இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில், சானியா சிக்கந்தர் - Rashmi Ganesh இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

>>>>>>><<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Rathika Seelan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-8, 11-7, 11-4 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Karen-ஐ வென்றார்.

>>>>>>><<<<<

இந்தியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா-ஏ அணி முதல் இன்னிங்ஸில் 221 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 78 ரன் எடுத்துள்ளது.

>>>>>><<<<<

ஹாங்காங் Sixers கிரிக்கெட் போட்டியில், இந்தியா Duckworth Lewis முறைப்படி, 2 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

ஹாங்காங்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணியக்கப்பட்ட 6 ஓவரில், 4 விக்கெட் இழப்புக்கு 86 ரன் எடுத்தது.

மழை குறுக்கிட்டதன் காரணமாக, 3 ஓவரில் 44 ரன் எடுத்தால் வெற்றி என்ற மாற்றியமைக்கப்பட்ட இலக்கோடு பேட் செய்த பாகிஸ்தான், ஒரு விக்கெட் இழப்பிற்கு 41 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

>>>>>>END<<<<<